இலங்கை வித்தியா போதினி
CEYLON
JOURNAL OF EDUCATION
(Tamil Section.)

தொகுதி : 4. | ஜூன் - 1946 | பகுதி : 5.

குடியியல்

சோல்பரி அரசியற் சீர்திருத்தங்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கம் 1943-ம் ஆண்டு மே மாதம் 26-ம் திகதி பிறப்பித்த ஒரு பிரகடனத்தில், இலங்கைக்கு முடியாட்சியின் கீழே உள்நாட்டுச் சிவில் ஆட்சியிற் பூரண பொறுப்பாட்சி வழங்கத்தக்கதாக அரசியல் திட்டத்திலே மாற்றம் செய்யப்படுமென அறிவித்திருந்தது. ஆயினும், அயல் தேசங்களினதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளினதும் உறவு சம்பந்தமாக இலங்கை யரசாங்கம் கைக்கொள்ளும் நடவடிக்கை யாவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கு முட்பட்டிருததல் வேண்டும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தகுந்த வழிவகைகளை ஆராய்ந்து சொல்வதற்காகவே சோல்பரி விசாரணைச் சபையினர் நியமிக்கப்பட்டார்கள். இச் சபையின் சிபார்சுகள் ஓர் அறிக்கை வடிவாக 1945-ம் ஆண்டில் வெளியிடப்பட்டன. இவ்வறிக்கையில் டொனமூர் அரசியல் திட்டம்பற்றியும் இலங்கையின் அரசியல் நிலைமை சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளைப்பற்றியும் கூறப்பட்டிருப்பதால் மாணவர் அவசியம் இதனைப் படித்தல் வேண்டும். இவ் வறிக்கையிற் கண்ட சிபார்சுகளில் மிக இன்றியமையாதவற்றின் சுருக்கம் இதன் பின்னுற் காணப்படுகிறது.

I. வாக்குரிமை.

வாக்குரிமையில் இப்போதுள்ள முறையில் எவ்வித மாற்றமும் சொல்லப்படவில்லை விசாரணைச் சபையார் பின்வருமாறு கூறி

யுள்ளார்கள் :— "1931-ன் பின்னுல் சமூக சீர்திருத்தத்துறையில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதால், சர்வஜன வாக்குரிமை கொடுக்கப்பட்டது, ஒழுங்கீனங்களிலிருந்தும், நியாயமான தொன்றெனவே எங்களுக்குத் திருப்தியளிக்கிறது. இதைவிடக் கட்டுப்பட்ட வாக்குரிமையில் எளிய மக்கள் தம் தேவைகளையும் ஆவல்களையும் பூர்த்தி செய்ய இம்மாதிரியான சந்தர்ப்பம் கிடைக்குமென்று நாங்கள் நினைக்கவில்லை. தேர்தல் பிரதேச வாரியான முறையில், ஒரு சில மாறுதல்களுடன், நிலைபெற வேண்டுமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. முற்ருகப் பிரதேச வாரியான தேர்தல் முறையில் சிங்களவருக்குப் பெரும்பான்மையான ஸ்தானங்கள்—உதாரணமாக 50-ல் 39 — போய்விடுமென்று விசாரணைச் சபையினர் கண்டார்கள். ஆகையால், ஸ்தானங்களைச் சம விகிதமாக்குவதற்கு, 1000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்துக்கு ஒரு ஸ்தானமாகவும் 75,000 பேர் கொண்ட குடிஜனப்பிரிவுக்கு ஒரு ஸ்தானமாகவும் அவர்கள் வகுத்தனர். இதைவிட, ஏதாவது ஒரு பகுதியில், "ஒரே விதமான வாழ்க்கை முறையில் அப்பகுதியின் பெரும்பான்மை வாசிகளின் வாழ்க்கையிலிருந்து வேறுபட்ட மக்கட் கூட்டத்தினர்" வசித்தால் அந்தச் சமூகத்தினருக்கு ஒரு புறம்பான பிரதிநிதித்துவம் வழங்கப்படும். இந்தத் திட்டத்தின்படி சிறுபான்மைச் சமூகத்தவர்கள் மேலும் விரிந்த பிரதிநிதித்துவம் பெறுவதற்கு அனுகூலம் கிடைக்கும். 101 அங்கத்தவருள்ள ஒரு சட்டசபையில், நியமன அங்கத்தவர்களுட்பட, பெரும்பான்மைச் சமூகப் பிரதிநிதிகள் 58 பேரும் சிறுபான்மையினர் 43 பேரும் இருக்கலாம் என்ற நம்பிக்கையிருக்கிறது.

வகுப்புவாரியான முறையில் தேர்தல் நடத்துவது பல சங்கடங்களை நீக்குவதற்குச் சுலபமான வழியாயினும் அது தேச நலத்துக்குத் தீமை பயக்குமென விசாரணைச் சபையினர் உணர்ந்தார்கள். வகுப்பு வேற்றுமையை யொழிக்க உதவும் எத்தகைய ஒரு சாதனமும் யாவருக்கும் நன்மையைத் தரும். ஆகையால், பெரும்பான்மையினரது நிலையையும் உரிமைகளையும் பாதிக்காத வகையில் சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்த முயற்சி செய்யப்பட்டது. அதனுலேயே 'சமபல பிரதிநிதித்துவம்' என்று சொல்லப்பட்ட திட்டங்களை விசாரணைச் சபையார் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். 'இயற்கைக்கு விரோதமாகப் பெரும்பான்மையினரைச்

சிறுபான்மையாக்க எத்தனிப்பது அசம்பாவிதமும் பயனற்றதுமென அவர்கள் கருதினார்கள். அரசாங்கத்தின் நோக்கம் ஆட்சிபுரிவதுதானென்பதும், விஸ்தாரமான கட்டுப்பாடுகளும் அல்லல்களும் அரசாங்கத்தில் அடிக்கடி விரும்பத்தகாத மாற்றங்களைப் புகுத்தி வலிமை யிழக்கச் செய்யுமென்பதும் நோக்கத்தக்கது. யாரோ ஒருவரிடம் ஆட்சியுரிமை யிருத்தல் வேண்டும். தவறான ஆட்சி நடவாமற் பார்ப்பதற்கே கட்டுப்பாடுகள். ஆனால் தவறான ஆட்சிக்குப் பாதுகாவல்கள் நிராட்சியைத் தருமானால் அரசாங்கத்தின் நோக்கமே தோல்வியுற்றுவிடும்.

II சட்டசபை.

கீழ் மேற் சபைகளாக இரு சபைகள் கொண்டிருக்கும். மேற் சபை செனட் என்ற பெயரில் 30 அங்கத்தவர்களைக்கொண்டிருக்கும். கீழ்ச் சபை பிரதிநிதிகள் சபை என்ற பெயரில் வழங்கப்படும்; அதன் அங்கத்தவர் 'பாராளுமன்ற அங்கத்தவர்' என்று அழைக்கப்படுவர். இவர்கள் 101 பேரில் 6 பேர் நியமனம் செய்யப்பட்டவர்களாயிருப்பர்.

பிரதிநிதிகள் சபை தான் உண்மையான அரசியல் அதிகாரம் பிறக்குமிடமாயிருக்கும். அரசாங்கம் நடப்பதற்கு இதுதான் வேண்டிய இயக்கத்தையும் சக்தியையுமளிக்கும். சகல சட்டங்களும் இச்சபையிலேயே தீர்மானிக்கப்படும். நிதி விஷயங்களும் இங்குதான் தீர்க்க வேண்டும். ஏதாவது காரணத்தினால் சபை அகாலத்தில் கலைக்கப்படாவிட்டால், சாதாரணமாக இதன் நீடிப்புக்காலம் 5 வருஷம்.

செனட் சபை முன் சொன்னதைக்காட்டிலும் எவ்வளவோ சிறியது; அத்துடன் பொதுஜன விருப்பு வெறுப்புக்கள் இதனை அவ்வளவாகப் பாதிக்கமுடியாது. என்ன விஷயத்தையும் அமைதியாகவும் சாவதானமாகவும் ஆராய்ந்து பேசுவதற்கு இச் சபை இடமளிக்கும். தேர்தலைப்பற்றியும் தொகுதியிலுள்ள வாக்குகளின் மனநிலையைப்பற்றியும் ஆலோசித்துக்கொண்டு அதற்குத் தக்கவிதமாக உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசவேண்டிய நிற்பந்தம் இந்தச் சபையிலுள்ள அங்கத்தவர்களைப் பாதிக்காது.

இச் சபைக்கு தேசாதிபதி 15 செனட்டர்களை நியமனம் செய்து வைப்பார். அவர்கள் அரசாங்க சேவையில் விசேஷ இடம்பெற்றுள்ளவர்களாகவோ, கல்வி, சட்டம், வைத்தியம், விஞ்ஞானம், எஞ்ஜினியவேலை, வங்கி, வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலிய துறைகளில் செல்வாக்குள்ளவர்களாகவோ இருத்தல் வேண்டும். இவர்கள் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்களாயிருப்பதோடு, இத்துறைகள் சம்பந்தமாக எத்தகைய விவாதம் தோன்றிபோதும் பூரண அதிகாரத்தோடு பேசக்கூடிய நிலைமையிருக்கும். அனுபவக் குறைவானவர்கள் புது உற்சாகத்தில் புகுத்த நினைக்கும் திட்டங்களை இவ் வனுபவசாலிகள் ஆர அமர யோசித்து அனுட்டானத்திற் சாத்தியமானதா என்று ஆலோசிக்கச் செய்வார்கள். மற்றைய 15 செனட்டர்களும் பிரதிநிதிகள் சபையால் "விகிதாசார பிரதிநிதித்துவம்" என்ற முறையில் தெரிவு செய்யப்படுவர்.

விகிதாசார பிரதிநிதித்துவம்.

இதை யறிந்துகொள்வதற்கு முன்பு, தற்போது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறையில் என்ன நேருகிறதென்று பார்ப்போம். காங்கேசந்துறைத் தொகுதிக்கு அ; ஆ; இ; மூவரும் அபேட்சகர்களாக நின்றார்களென்றும் அவர்களுக்குப் பின்வரும் வாக்குகள் கிடைத்தனவென்றும் வைத்துக்கொள்வோம்;

அ :	...	12,000
ஆ :	...	10,000
இ :	...	8,000
		30,000

அ என்பவர் தேர்ந்தெடுக்கப்படுவார். ஆனால், இத்தேர்தலில் அவருக்கு மாறாக நின்றவர்கள் 18,000 பேராயிருந்தும் அ தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். 30,000 பேருள்ள ஒரு தொகுதியில் தமக்கு சாதகமாக 12,000 வாக்குகளும், பாதகமாக 18,000 வாக்குகளும் பெற்ற ஒருவரை உண்மையான பிரதிநிதி என்று சொல்லமுடியாது. தற்போதுள்ள தேர்தல் முறையில்,

பெரும்பான்மையானவர்கள் ஒருவருக்கு மாறுயிருந்தபோதிலும் அவர் தேர்ந்தெடுக்கப்படத்தக்க நிலைமையிருக்கிறது.

இவ் விபரீதத்தை விகிதாசார பிரதிநிதித்துவம் நீக்குமென்று நம்பப்படுகிறது. இந்த முறை வெற்றிகரமாக நடக்க வேண்டுமானுல் இப்போது பல நாடுகளிலிருக்கும் தனி யங்கத்தவர் தொகுதிகளா யில்லாது பல அங்கத்தவர் தொகுதிகளா யிருத்தல் வேண்டும். அதாவது, பெரிய தொகுதிகளாக வகுக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் பல அங்கத்தவர்களைப் பிரதிநிதிகளாய்த் தெரிந்தெடுக்கும் வசதி யளிக்கப்படவேண்டும்.

இந்தத் தேர்தல் முறை பின்வருமாறு அனுட்டிக்கப்படும்: ஒவ்வொரு வாக்காளனிடமும் ஒரு சீட்டுக் கொடுக்கப்படும். அச் சீட்டில் அபேட்சர்களின் பெயர்களிருக்கும். வாக்காளன் தனக்கு மிகவும் பிடித்தவரை முதலாவதாகவும், அடுத்தவரை இரண்டாவதாக வும், இங்ஙனம் வரிசைக்கிரமமாக இஷ்டத்தைத் தெரிவிக்கவேண்டும். அதாவது, தமக்குப் பிடித்தவர்களை ஒழுங்காக 1, 2, 3, என்று குறிப்பிடவேண்டும்.

இதன் பின்னர், வாக்குச் சீட்டுகள் முழுவதும் எத்தனை யென்று கணக்கிட்டு அத்தொகையை அபேட்சகர் தொகையுடன் ஒன்று சேர்த்து அத்தொகையால் வகுத்து வந்த தொகையுடன் ஒன்று கூட்டிக்கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் வந்த தொகை கட்டாய பங்கு என்று சொல்லப்படும். உதாரணம் :— 100 வாக்காளர் இருக்கிறுர்கள் என்றும், ஒரு அங்கத்தவரைத் தெரிய வேண்டுமென் றும் வைத்துக்கொள்வோம். 100 ஐ 2 ஆல் வகுக்கவேண்டும். (அங்கத்தவர் ஒருவர்; அத்துடன் ஒன்று சேர்த்தால் 2;) ஈவு 50. இதற்கு ஒன்று கூட்டினுல் 51. ஆகையால், 51 வாக்குகளுக்கு மேல் பெறும் அபேட்சகர் தெரிவு செய்யப்படுவார்.

இன்னுமோர் உதாரணத்தைப் பார்ப்போம் :

1,00,000 வாக்காளருள்ள தொகுதியில் 9 அங்கத்தவரைத் தெரிவு செய்யவேண்டும். இதில் கட்டாயப் பங்கு

$$\frac{1,00,000}{10\ (9+1)} = 10,000 + 1 = 10,001$$

இந்தத் தொகை அல்லது இதற்கு மேற் பெறும் அபேட்சகர் எல்லாரும் தெரிவு செய்யப்படுவர். மற்றவர்களின் நிலையென்ன? அ என்பவருக்கு 12001 முதல் வாக்குகள் கிடைத்தன என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் கட்டாயப் பங்கிலும் பார்க்க 2000 அதிகமாக அவருக்கிருக்கிறது. அ வுக்கு கிடைத்த முதல் வாக்குகள் 12000 1-க்குப் பின்னால் ஆ என்பவருக்கு 9000 ம், இ என்பவருக்கு 3000 ம் கிடைத்திருக்கின்றன. ஆகையால், அ வுக்குக் கிடைத்த அதிகப்படியான 2000 ஐயும் ஆ வுக்கும் இ வுக்கு மிடையில் பின்வருமாறு பிரித்தல் வேண்டும்:

$$(1)\quad \frac{9000}{12000} \times 2000 = \frac{3}{4} \times 2000 = 1500.$$

$$(2)\quad \frac{3000}{12000} \times 2000 = \frac{1}{4} \times 2000 = 500$$

ஆ வுக்குள்ள 9000 முதல் வாக்குகளுடன் 1500 இரண்டாம் வாக்குகளைச் சேர்த்தால் 10,500 கிடைக்கும். இத் தொகை கட்டாய பங்குக்கு அதிகமாகையால் ஆ வும் தெரிவு செய்யப் படுகிறார்.

இதே விதமாக, அதிகப்படியான வாக்குகள் பெறுபவர்களின் சேஷங்களை அடுத்த அபேட்சகர்களின் தொகையுடன் சேர்த்து, தேவையான அங்கத்தவர் தெரிவுசெய்யப்படுமட்டும் இம்முறை அனுட்டிக்கப்படும்.

இந்தத் தேர்தல் முறையில் முக்கியமான சிறுபான்மைச் சமூகத் தினருக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கத்தக்க இடமுண்டு. மக்களின் உண்மையான விருப்பம் தேர்தற் பெறு பேறுகளில் தெளிவாகத் தெரியவரும்.

இந்த முறையின்படி செனட் சபைக்கு 15 அங்கத்தவர் தெரிந் தெடுக்கப்படுவர். பாராளுமன்றத்தின் அங்கத்தினர் தொகை 101; இந்த 101 பேரும் வாக்காளராயிருந்து 15 பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டுமாகையால் நாம் முற்கூறிய விதியின்படி கட்டாய

பங்கு $\frac{101}{16} = 6 \cdot 3 + 1 = 7$. இந்தக் கட்டாய பங்கு மிகவும் குறைந்த ஒரு தொகையா யிருப்பதால் சிறுபான்மைச் சமூகத்து அபேட்சகர் பலர் செனட்டில் தெரிவு செய்யப்பட வசதியுண்டு.

செனட்டின் உபயோகம் அதன் முன் ஆலோசனைக்கு வரும் விஷயங்களை ஆர அமரப் பரிசீலனை செய்யும் முறையில் தங்கியிருக்கிறது. இந்த செனட் ஒரு சட்டம் நிறைவேற்றப்படாமல் கூடியது ஒரு மாத காலத்துக்கு மாத்திரம் தாமதிக்கச் செய்யலாம். கீழ்ச் சபை தீர்மானித்த ஒரு மசோதாவை இந்த செனட் நிராகரிக்க, கீழ்ச்சபை அதைக் கவனியாது அடுத்தடுத்து இரண்டு கூட்டங்களில் நிறைவேற்றுமாயின் அம் மசோதா கட்டாயமாக நிறைவேறிவிட்டதாகக் கருதப்படவேண்டும்.

நிதி சம்பந்தமான ஒரு மசோதாவை ஒரு மாத காலம்வரை தாமதப்படுத்தும் உரிமையைத் தவிர செனட் அதை நிராகரிக்கும் உரிமை பெறுது. இங்ஙனம் தாமதப்படுத்தி வைப்பதே சட்டசபையில் இந்த புனராலோசனை செய்யவும், அவசரப்பட்டு ஆத்திரத்தில் கருமங்கள் நடத்தும் அவதியைத் தடுக்கவும் ஏதுவாயிருக்கும். ஆனல் கீழ்ச்சபைக்கு மேலான அதிகாரம் செனெட்டுக்கு இருக்க முடியாது. மக்களின் பிரதிநிதித்துவம் இதற்கு இல்லை. ஆயினும் கீழ்ச்சபையிலிருக்கும் மக்களின் பிரதிநிதிகளுக்கு இந்த செனெட் உதவி தரக்கூடியதாயிருப்பதே அதன் பயன் என்று சொல்லக்கூடும்.

III. நிர்வாக சபை.

ஆட்சி நிர்வாகத்துக்கு ஒரு பிரதம மந்திரியும் கபினெட் என்ற மந்திரிசபையும் பொறுப்பாயிருப்பர்.

சட்டசபைக்குத் தேர்தல் முடிந்ததும், கவர்னர் ஜெனரல் தமது அபிப்பிராயத்திலே சபையின் பெரும்பான்மையான ஆதாரவைப் பெறும் அங்கத்தவர் ஒருவரை வரவழைத்து அவரைப் பிரதம மந்திரியாக நியமிப்பார். இதன் பின்னர் பிரதம மந்திரி சட்டசபையின் தீர்மானங்களை உறுதியுடன் நிர்வகித்து நடத்தக்கூடியவரும்

தமது சகாக்களாயிருக்கத்தக்கவர்களுமான மந்திரிகளைத் தேர்ந்தெடுத்து கவர்னர் ஜெனரலுக்குச் சமர்ப்பிப்பார். கவர்னர் ஜெனரலின் அங்கீகாரம் பெற்றதும் இம் மந்திரிகள் கபினெட் அங்கத்தவர்களாவர். கபினெட் மந்திரிகளும் பிரதம மந்திரியும் ஒருமித்தும் சட்டசபைக்கே கட்டுப்பட்டவர்களாயிருப்பர். சட்டசபை விரும்பாவிடில் நீக்கிவிடவும் உரிமையுண்டு. ஆனால் கபினெட் அங்கத்தவர்கள் ஒரு கூட்டாகச் சேர்ந்து கருமம் பார்க்கவும் தமது காரியங்களுக்குப் பொறுப்பேற்கவும் ஓர் ஐக்கியமான திட்டம் அமைத்துக்கொள்ளவேண்டியதவசியம். தமது கொள்கை இன்னதுதான் என்று ஏற்கனவே தீர்மானித்து ஒருப்படவேண்டும். இந்தக் கொள்கை ஒரு குறிப்பிட்ட வகுப்பின் கொள்கையாயிருக்காது. முழு அரசாங்கப் பரப்புக்கும் பொதுக் கொள்கையாயிருத்தல் வேண்டும். ஆகையால் கபினெட் மந்திரிகள் யாவரும் ஒன்று சேர்ந்து கலந்தாலோசித்து நாட்டின் அபிவிருத்திக்கேற்றதாகத் திட்டவட்டமான ஒரு கொள்கையைத் தீர்மானித்துக்கொள்ளுதல் வேண்டும். தற்போதுள்ள நிர்வாகசபை ஆட்சிமுறையில் இந்த ஒருமித்த கொள்கை கிடையாது. மந்திரிகளின் நிர்வாகசபைகளுக்கிடையே போட்டியும் பிணக்கும் ஏற்படச் செய்கிறது. ஒவ்வொரு நிர்வாக சபையும் தனக்கெனச் சொந்தத் திட்டம் ஒன்றை வகுத்துக்கொள்வதால் மற்றவர்களுடன் கலந்து மேவி ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்திக் காரியம் பார்க்க முடியாது. ஆனால் கபினெட் முறை வேறு. ஒவ்வொரு இலாக்கா சம்பந்தமான திட்டமும் பொதுவான ஒரு பெரிய திட்டத்தின் கூறாகவே வகுக்கப்படும். ஒவ்வொரு காளையும் ஒவ்வொரு திசையில் இழுக்காது சகடத்தை ஒருமித்த பான்மையில் ஒரு திசையில் இழுக்கக்கூடிய முறையாயிருக்கும். பிணைப்பிலிருந்து விடுபடாதிருக்க வேண்டுமாகையால் பொதுஜன சேவைக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு கருமமாற்றவேண்டிய கட்டாயமேற்படும். இங்ஙனமாக உருப்படியான கொள்கைகள் வகுக்கப்படுமென்றும் திட்டவட்டமான கொள்கையில் அரசியற் கட்சிகள் தோன்றக்கூடுமென்றும் நம்பப்படுகிறது.

கபினெட்டில் 10 மந்திரிகள் இருப்பார்கள். பிரதம மந்திரி வெளிநாட்டு விவகாரம் சம்பந்தமான அலுவல்களையும் கவனித்துக் கொள்வார். தற்போதுள்ள நிதிக்காரியதரிசிக்கும் சட்டக்காரியதரிசிக்கும் பதிலாக நிதிமந்திரி ஒருவரும் சட்டமந்திரி ஒருவரும் நியமிக்

கப்படுவார்கள். அரசாங்க சேவையின் நடைமுறைபற்றியும் ஒழுங்கு முறை பற்றியும் நிதிமந்திரி கவனித்து வருவார். மற்றைய ஏழு மந்திரிகளும் இன்றிருப்பது போலவே யிருப்பர். இங்ஙனமாக இலங்கையின் உள்நாட்டு நிர்வாகப் பொறுப்பு யாவும் இலங்கை மந்திரிகளின் கையிலிருக்கும். குடியேற்றம், ஜனத்தொகையமைப்பு சம்பந்தமான விஷயங்களும் மந்திரிகளின் பொறுப்பிலேயே விடப்பட்டுள்ளன. ஆனுல், பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினைகள் யாவும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கடமைகள். பாதுகாப்பு அமைப்புக்கள் அணி வகைகள், அவற்றின் ஸ்தாபனம், பரிபாலனம், நிர்வாகம்,, உபயோகம் முதலான சகல காரியங்களும் சம்பந்தப்படும் செலவு வகைகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் ஒன்றுகலந்து பேசிப் பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

சிறுபான்மைச் சமூகங்கள்.

நமது இலங்கை போன்ற தேசங்களில் ஜனநாயக முறைகளைப் புகுத்தினுல் அது கட்டாயமாகப் பெரும்பான்மைச் சமூகத்துக்கு அதிக அரசியல் அதிகாரத்தை வழங்கிவிடுவது தவிர்க்க முடியாது. ஆகையால் இயல்பாகவே மற்றைய சிறுபான்மைச் சமூகத்தினர் தாம் அடக்கியாளப்படலாம் என்று அஞ்சுவர். பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் தமது நடத்தையினுல் காரியபூர்வமாகச் சிறுபான்மையினரின் நம்பிக்கையைப் பெறும்வரையில் சில பாதுகாப்புக்கள் அவசியமாகின்றன. மக்களின் அரசாங்கம் என்று சொல்லப்படவேண்டுமாயின் பெரும்பான்மையினருக்கு அதிகார மிருத்தல் வேண்டுமென்றே சோல்பரி சபையினர் கருதினர். ஆனுல் அதே சமயத்தில் தாராதம்மியமிலலாது இந் நாட்டில் சமநிலையாக யாவர்க்கும் அரசியலுரிமை யிருக்கவேண்டுமாகையால் சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்குச் சில பாதுகாப்புகளிருக்கவேண்டிய தவசியமென்றும் உணர்ந்தார்கள்.

அப்பாதுகாப்புகளில் முக்கியமான சில வருமாறு :

1. மேற் சபை யொன்று—செனெட்—அமைத்தல்.
2. சிறுபான்மைச் சமூகத்தவரின் நியாயமான உரிமைகளைப் பாதிக்கும் சட்டங்களை நிறைவேற விடாது நிறுத்திவைக்கும் விசேஷ அதிகாரம் தேசாதிபதிக்குக் கொடுக்கப்பட்டிருக்

கிறது. இலங்கைப் பாராளுமன்றத்திலும் அதற்குப் புறத்தேயும் கடுமையான எதிர்ப்பைப் பெறும் சட்டங்களையும் தேசாதிபதி அங்கீகாரம் கொடாது நிறுத்தலாம்.

3. அரசியல் தலைவர்கள் தலையிடாதவாறு தனிப்பட்ட ஒரு அரசாங்க சேவைச் சபை நிறுவப்படும். அரசாங்கத்துக்கு வேண்டிய உத்தியோக நியமனங்களுக்கெல்லாம் இச் சபையே தேசாதிபதிக்கு சிபார்சு செய்யும்.

தேசாதிபதியின் அதிகாரங்கள்.

டொனமூர் அரசியல் விசாரணைச் சபையார் தாம் செய்துள்ள சிபார்சின்படி, தேசாதிபதி, பழைய குடியேற்ற நாட்டுக்காலப் பதவிக்கும் பிற்காலத்திய அரசியல் திட்ட நிர்வாகப் பதவிக்கு மிடையிட்ட ஒரு ஸ்தானம் வகிக்கவேண்டுமென்று விரும்பினர். ஆகையால், மன்னரின் அங்கீகாரத்துக்கெனப் புறநீங்கற் படுத்தப்படவேண்டிய மசோதாக்களில் 17 வகையானவற்றை அவர்கள் வகுத்து வைத்தனர்.

ஆனால் சோல்பரி சபையினர் 7 வகையானவற்றை மாத்திரம் குறிப்பிட்டுள்ளார்கள். இவை பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், நாணயச் செலவாணி, வங்கி நோட்டு முதலான விஷயங்கள் சம்பந்தமானவை. இதனால், அரசியல் திட்டம் நடைபெறுவதில் தேசாதிபதி நேரடியாகத் தலையிடுதல் எவ்வளவோ குறைக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான நிர்வாகம் முழுவதும் மந்திரிகளின் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசியல் வாழ்விலிருந்து தேசாதிபதி வரவரப் பின்வாங்கி எந்தக் கட்சியிலும் சேராத, இங்கிலாந்தின் மன்னர் போன்று, ஒரு தனியான ஸ்தானம் வகிக்கிறார்.

தேசாதிபதியின் ஸ்தானம் அநேகமாக டொமினியன் நாடுகளின் (கவர்னர்-ஜெனரல்) ராஜப் பிரதிநிதிகளின் ஸ்தானத்தைப் போன்றிருக்கிறது. இவர் தமது மந்திரிகளின் விசேஷமாக பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி கருமமாற்ற வேண்டுமென்று சொல்லப்படுகிறது. பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், மந்திரிகளை

நியமித்தல், அகற்றுதல் போன்ற விஷயங்களில் தேசாதிபதி, இங்கிலாந்திலே மன்னருடைய கடமைகள் என்ன விதமான சம்பிரதாயத்தில் நடைபெறுகின்றனவோ அதே வழியைக் கடைப்பிடித்தல் வேண்டும். இங்ஙனமாக, இலங்கைத்தீவின் அரசாங்கம், பாதுகாப்பு வெளிநாட்டு விவகாரம் ஆகிய இரு விஷயங்களைத்தவிர மற்றும் சகல காரியங்களிலும் தேசாதிபதியின் பொறுப்பிலிருந்து மக்களின் கையில் மாறுகிறது. அயல்நாட்டு விவகாரம் ஒன்றைத் தவிர, மற்றப்படி முடிக்குரிய நாடாயிருந்து இப்போது சுயாட்சி நாடாகிறது. அயல் நாட்டு விவகாரத்திலும் பிரதம மந்திரியிடம் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்க, பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசிக்க வேண்டிய கடமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றைய பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் பாதுகாப்புக்கும் இலங்கைத்தீவின் நிலையம் உயிர்நாடி போன்றதாகையால், பாதுகாப்பு விஷயங்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தையும் கலந்துகொள்ளவேண்டியது நியாயமானதே. இந்த விசேஷாதிகாரத்தைச் சிலர் ஆட்சேபித்தாலும், தற்கால யுத்த முறைகளை உண்மையான நிலையில் வைத்துச் சிந்திப்பவர்கள் இத்தகைய ஒழுங்கின் அவசியத்தையுணர்வார்கள்.

எஸ். எவ். டி சில்வா

கல்வியும் தமிழகமும்

(முற்றொடர்)

கற்றோர் சிறப்பு.

ஒருவருடைய பேச்சிலிருந்து அவருடைய தன்மைகளை அறியலாம். அதுபோல ஒரு மொழியினைப் பேசும் மக்கள் வழிவழியாகச் சொல்லிவரும் பழமொழிகள் முதுமொழிகள் முதலியவற்றிலிருந்து அவர்களுடைய பழைய நிலைமைகளை நன்கறியலாம். "கற்றலிற் சிறந்தன்றே கற்றோரை வழிபடல்" என்பது ஒரு முதுமொழி. தமிழகத்தில் கற்றோரை வழிபட்டார்கள்; அவர்களுடைய நட்பை விரும்பினார்கள்; அவர்களைக் கண்ணாகப் போற்றினார்கள். கற்றவர்களே பெரியவர்களாகவும் அறிஞர்களாகவும் சான்றோர்களாகவும் தொண்டர்களாகவும் விளங்கினர். எக்குலத்திற் பிறந்தாலும் மேற்குலத்தினர்களாக மதிக்கப்பட்டனர். ஆண்டால் இளைஞராயினும் முதியவர்களாகவும் நன்மதிப்புக்கு உரியவர்களாகவும் காணப்பட்டனர்.

அரசர்களும் குடி, குலம், வயது முதலியன நோக்காது கற்றவர்களையே விரும்பி அழைத்து அரச சபையிலிருத்தி அவர் காட்டிய வழிச் சென்றார்கள். "கற்றோர்க் காண்டலாகும் காவலிற் பெற்ற பயன்" என எண்ணினார்கள். எந்நாட்டிலும், எவ்வூரிலும் அவர்களுக்குப் பெரும் சிறப்புக்கள் செய்யப்பட்டன. அவற்றைக் கண்ட திருவள்ளுவரும், "யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்று கூறினார். "கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்றார் வேறொரு புலவர். அதிகாரம், செல்வம், புகழ் முதலியன நிறைந்து நாட்டிற்குத் தலைவனாக விளங்கிய அரசனிலும் கற்றவர்களே சிறப்புடையவர்களாய் இருந்தனர். அரசனுக்குத் தன் தேசத்திற்றான் சிறப்பு உண்டு; ஆனால் கற்றோர்க்கு எங்கும் சிறப்பு உண்டு. உடன் பிறந்தவர்களுக்குள்ளும் ஒரு குடியிற் பிறந்தவர்களுள்ளும் கற்றோருக்கே சிறப்புச் செய்தனர்.

எக்காரணத்தாலும் மனம் திரிந்து பெற்ற பிள்ளைகளிடத்தில் வெவ்வேறு அளவினதான அன்பு கொள்ளாத பெருமை தாய்க்குண்டு. இவ்வுண்மையைத் தாய்மாரே அன்றித் தமிழ் மக்கள் யாவரும் நன்கு அறிந்திருந்தனர். 'தாயன்பு' என்று விசேடமாகப் போற்றினர். இத் தாய்கூடத் தன் மக்களுள் கற்றவனையே அதிகம் விரும்பினுள். தாயிற் சிறந்த தயை மிக்க கடவுளும், "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாக" இருக்கின்ருர்.

நுட்பமான பொருள்களை விளக்குதற்குப் புலவர்கள் உவமைகளை உபகரணங்களாக உபயோகித்தனர். ஆகையால் அந்த உபகரணங்களுளொன்றை நாமும் கையாளுவோம். விலங்குகளிலும் மக்கள் எவ்வளவு உயர்ந்தவர்களோ கல்லாதவர்களிலும் கற்றவர்கள் அவ்வளவு உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர்1 என்று திருவள்ளுவரே பாடிவைத்திருக்கிறுர். இந்த ஒரு குறளே கற்றவர்களின் சிறப்பை அங்கையங்கனியெனக் காட்டத்தக்கது.

கல்லாரிழிபு.

ஒரு புலவர் செல்வன் ஒருவனைப் புகழ்ந்து பாடினுர். 'காமதேனுவே, கற்பக தருவே, சிந்தாமணியே, சொல்லுக்கு அரிச்சந்திரனே......' என்றெல்லாம் வருணித்தார். புலவர் தீட்டிய ஓவியங்களைப் பார்த்து வியக்க அவனுல் முடியவில்லை. குருடர்களுக்கு இரவிவர்மன் தீட்டிய ஓவியங்களைப் பார்த்து இன்புற முடியுமா ?

செல்வனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'ஓய் புலவனே யாரையடா நீ மாடு கல் மரம் என்று கூறினுய் ? அது போகட்டும் அரிச்சந்திரன் என்றும் பழித்தாயே ! யாருக்கு நான் அடிமையானேன், எவர்களுக்குப் பெண்டு பிள்ளைகளை விற்றேன். அடபாவி ! இந்த வசை தீருமா' ? என்று பிதற்றினுன்.2 ஏன் ? அவன் குருடன், மூடன், கல்லாதவன்; கல்லாதவர்களை அக்காலத்தில் 'முகத்திரண்டு புண்ணுடையார்' என்று கருதினுர்கள் எனத் திருவள்ளுவர் கூறுகிறுர்.

---

1. " விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்
கற்ருரோ டேனையவர் "

2. 110-ம் பக்கம் பார்க்க

மேலே குறிப்பிட்ட புலவர் பாடியதுபோல் புகழ்ந்து கூறுது ஒருவனைப்பார்தது மரம், பதர், நாய், புல், பாவைப்பிள்ளை, குருடன், செவிடன் என்று பழித்துக் கூறினுல் அவனுக்கு எவ்வளவு ஆத்திரமும் துக்கமும் வந்துவிடும். தமிழ் மக்கள், அவர்களுள்ளும் அறிவிற் சிறந்த புலவர்கள் கல்லாதவர்களை இவ்வாறு கூறித்தான் பழித்தார்கள்.

கல்லாதவர்கள் மேற்குலத்திற் பிறந்தாலும் கீழ்க் குலத்தவர்களாகவும் நெல்லினுட் பிறந்த பதராகவும் கருதப்பட்டனர். சபையில் ஓலை வாசிக்கத் தெரியாதவனை அறிஞர்கள் மரத்துக்கு ஒப்பிட்டனர்; பயிருடன்கூடிய புல்லுக்குச் சமனுக மதித்தனர். கற்றவர்களுடைய சபையிற் கல்லாதவன் இருப்பது நாய் இருப்பதற்குச் சமனுகவும் அவன் பேசுவது நாய் குரைப்பதைப்போலவும் இகழப்பட்டன. பிறருக்கு உதவாமையானும் தமக்குப் பயன்படாமையாலும் கல்லாதவர் 'பயவாக்களர் நிலத்தை' ஒத்து விளங்கினர் அவர்களுடைய உடம்பு பாழ் உடம்பாகக் கணிக்கப்பட்டது. அவர்களுடைய அழகு மண்பாவையின் அழகுக்குச் சமமாகப் பழிக்கப்பட்டது. அவர்களைச் சேர்ந்திருத்தல் நரகத்திலிருப்பதற்கு நிகராக எண்ணப்பட்டது. அவர்கள் புண்ணியம் பாவம், இம்மை மறுமை வீடு முதலியவற்றில் யாதொன்றினையும் அறிய முடியாத மூடர்கள். அவர்களுக்குச்

---

2. யாரு நீரென்னலும் வித்துவானெனவும் மதிமோசம் வந்ததென்றே
வாய்குழறி மெய்யெலாம் மிகநடுக்குற்று வந்தகாரிய
மேதென்னச்

சீருலாவிய காமதேனுவே தாருவே சிந்தாமணிக்கு நிகரே
செப்புவசனத் தரிச் சந்திரனே என்னவும் சினந்திரு
கணுஞ் சிவந்தே

யாரையடா மாடு கல் மரமென்று சொன்னதுமலால்
அரிச்சந்திரனென்றே

அடாத சொற் சொன்னையே ஆர்க்கடிமையாகினேன்
ஆர்கையிற் பெண்டு விற்றேன்

தீருமோ இந்தவசை என்றுரை செய் வெகு கொடிய தீயரைப்
பாடி நொந்தேன்

திருமன்றுள் நடு நின்று நடமொன்று புரிகின்ற
தென்றில்லை நடராசனே.

செல்வத்தாலும் பயனின்று. அவர்கள் சில சமயங்களிற் கூறும் நல்ல பொருள் பொதிந்த கூற்றுக்களைத்தானும் அறிஞர் வெறுத்தொதிக்கினர்.

அவர்களுடைய குடியும் குலமும் தம் பெருமையிழந்து அழிந்துவிடும். அவர்கள் தங்களுக்கு மாத்திரமன்றித் தங்களைப் பெற்ற தாய்மாருக்கும் வடுவையும் வசையையும் ஈட்டிக்கொடுக்கிறார்கள்.

" வெண்பா விருபாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாள் "

என்று ஔவை மூதாட்டியாரே இரங்குகிறார்.

கல்லார் பாவமும் பழியும் நிறைந்த பெருங்குற்றஞ் செய்தவர்களாகவும் வெறுத்தொதுக்கப்பட்டனர். 'கல்லாத மூடரைக் காணவும் ஆகாது; கல்லாத மூடர் சொற் கேட்கக் கடனன்று' என்கிறார் திருமூலர்.

கட்டாயக் கல்வி.

'இளமையிற் கல் நூல்பலகல், வித்தை விரும்பு, எண்ணெழுத்திகழேல், ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம், கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே, உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' என்னும் இச்கூற்றுக்கள் புலப்படுத்தும் பேருண்மையாது ? அதுதான் கட்டாயக் கல்வியாகும். கல்லாதவர்களைத் தமிழ்மக்கள் ஒரு சிறிதும் மதித்திலர் என்பது முன்னரே கூறப்பட்டுளது தமிழ் நாட்டிலே இளமைப் பருவத்தில் கல்லாமை குற்றமாகக் கருதப்பட்டது என்பதை நான்மணிக் கடிகை எம் நூல் நன்கு புலப்படுத்துகிறது. 'மக்களைக் கல்லா வளரவிடல் தீது', 'காதற் புதல்வர்க்குக் கல்வியே விளக்கு', 'குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னாது', எனப் பலவாறு தமிழ் நூல்கள் முழங்குகின்றன. இக்காலத்துப் பல நாடுகளிலும் காணப்படும், அரசினரின் கட்டாயக் கல்விப் பிரமாணம் அக்காலத்தில் தமிழ் நாட்டில் இல்லை. இப்படிப்பட்ட பிரமாணம் தேவைப்படவும் இல்லை. உணவு உடை முதலியவற்றைக் கொடுத்துத்

தம் மக்களைக் காப்பாற்றியதுபோல் கல்வியையும் இன்றியமையாத தொன்றாகக் கருதிக் கற்பித்தனர். திண்ணைக் கொன்றாகப் பள்ளிக் கூடங்களும் காலைக் கொன்றாகப் பல ஆரம்ப பாடசாலைகளும் தமிழ் நாட்டில் விளங்கின. இப்பாடசாலைகளிற் கற்பித்த ஆசிரியர்கள் கணக்காயர் எனப்பட்டனர். கணக்காயர் இல்லாத ஊர் நன்மை பயவாதெனத் திரிகடுகம் கூறுகிறது. தாய்மார் மக்களின் உடம்பை வளர்த்தனர்; தந்தையர்கள் கல்வியை ஊட்டுவித்து அறிவை வளர்த்தார்கள். அவர்களுடைய உயிரினும் பார்க்க அவர்தம் மக்களின் அறிவுடைமை அவர்களுக்கு இனியதாயிருந்தது. தம்மக்கள் கற்றறிந்து சான்றோராகிவிட்டார் என்பதை யறிந்து ஈன்றஞான்றினும் பெரிது வந்தனர். 'ஈன்று புறந்தருதல் என்கடன், சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன்' என்று ஒரு தாய் கூறினாள். இக்காலத்தில் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதுவரையும் தந்தையர் கற்பித்தல் வேண்டும் என்பது அரசினர் விதித்த பிரமாணம். அக் காலத்தில் திருவள்ளுவர் கூறிய அறிவுரை

" தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல் ", என்பது.

சாந்துணையுங் கற்றார்.

தமிழ் நாட்டில் தம்மக்களுக்கு இளமைப் பருவத்தில் கல்வியைத் தவறாது கற்பித்தனர். கற்ற அளவில் அமையாது இறக்கும்வரையும் கற்கவேண்டுமெனும் நோக்கமும் இந்நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியும் தமிழ் மக்களிடையே காணப்பட்டன. நூறாண்டளவும் ஏட்டைக் கைவிட்டிலர். ஓதாமலொரு நாளும் இருக்கப்படாதென்றெண்ணினர். 'நவை போகாது நாளும் கற்றல்' இனியது எனவும் பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய கற்றலின் மிக இனியது' பிறிதொன்றில்லை யெனவும் அறிந் தொழுகினர்.

" யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாதவாறு " எனும் திருக்குறளை

நாம் மறக்கமுடியுமா.?

(தொடரும்)